மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது, பழங்குடியினர் மற்றும் இதர மரபுவழி வனவாழ்வினர் (வன உரிமை அங்கீகரிப்பு) சட்டம், 'The Scheduled Tribes and other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights) Act, 2006'–ன்படி மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒரு ஹெக்டேர் பரப்பளவிற்குக் கீழுள்ள சாலைகளைப் பராமரிக்கவும் மற்றும் மேற்பார்வையிடுவதற்கும் தமிழக வனத் துறையால் அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும், தாங்கள் கேட்ட பகுதிகளில் ஒரு ஹெக்டேருக்குமேல் இருந்தால் அதுகுறித்து ஆராய்ந்து, அதற்கு உடனடியாக உத்தரவு தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

67—

ஜவுளிப் பூங்கா

***5320—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைத்திட கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

2022 ஏப்ரல் 7]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவுளித் தொழில் பல இடங்களிலே ஆரம்பிப்பதற்கு முன்பே திருச்செங்கோட்டிலே தொடங்கப்பட்டது. அதற்குப் பிறகு அரசின் சார்பில் ஜவுளிப் பூங்கா எதுவும் ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், அதனுடைய வளர்ச்சி பின்தங்கிப் போனது. இந்தத் தலைமுறை அங்கிருக்கிற விசைத்தறித் தொழிலிலே ஈடுபடுவதை விரும்பாமல் நவீன தொழில் செய்வதற்கு விரும்புகிறார்கள். அவர்கள் திருப்பூருக்கும், கரூருக்கும் சென்று இன்றைக்கு தொழில்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் ஜவுளிப் பூங்காவை திருச்செங்கோட்டிலே ஆரம்பிப்பதன் மூலமாக, திருப்பூர், கரூர் அளவிற்கு, திருச்செங்கோடு, ஏற்றுமதி மையமாக மிகப் பெரிய அளவிலே வளர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இன்னொன்று, ஆரம்பக் காலங்களிலேயே விசைத்தறிகள் அங்கே வந்த காரணத்தினால், குடியிருப்புப் பகுதிகளிலே இன்றைக்கு விசைத்தறிகள் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. விசைத்தறியை மாற்றி* auto loom *ஆக மாற்றுவதற்கான முயற்சிகளில் இறங்கும்போது, குடியிருப்புப் பகுதிகளிலே திரும்ப அந்தத் தொழிலைச் செய்ய முடியவில்லை. அதனால் அங்கே அந்தத் தொழில் அழிவதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, திருச்செங்கோட்டிற்கு ஜவுளிப் பூங்கா அவசியமாகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–20

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கும் திட்டம்–*Scheme for Integrated Textile Parks (SITP) *தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஜவுளிப் பூங்கா அமைக்க போதுமான நிலங்கள் வேண்டும். மொத்தத்தில் ஒன்றிய அரசின் சார்பில் 40% மானியமும், நமது தமிழக அரசின் சார்பில் 9% மானியமும், ஒட்டுமொத்த முதலீடு ரூ.100 கோடி என்றால், ரூ.40 கோடிதான்* maximum; *ரூ.200 கோடி என்றால், அதற்குக் கிடையாது. அதேபோன்று, தமிழக அரசின் மூலமும் 9%, ரூ.9 கோடிதான். நீங்கள் ரூ.100 கோடி முதலீடு செய்தால், அதற்கு*

[2022 ஏப்ரல் 7

ரூ.9 கோடி மானியம் வரும். தமிழ்நாட்டில் 9 தொழிற்பூங்காக்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றில், இன்றைக்கு 5 தான் செயல்படுகின்றன. 9 தொழிற்பூங்காக்களை நாம் announce செய்து, அவற்றில் 5 தான் செயல்படுகின்றன. அவை பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவாளர் பூங்கா (Palladam Hi–tech Weaving Park), மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, (Madurai Integrated Textile Park, Vadipatti), ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர் (Integrated Textile Park, Karur), உயர் தொழில்நுட்ப நெசவாளர் பூங்கா, குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் (Hi–tech Weaving Park, Namakkal), பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, காஞ்சிபுரம் (Arignar Anna Handloom Silk Park, Kancheepuram).

பேரறிஞர் அண்ணா கைத்தறி பூங்காவானது இந்த ஆட்சி வந்த பிறகுதான் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கைத்தறி பட்டுப் பூங்கா, 2010 ஆம் ஆண்டு தலைவர் ஆட்சியில் இருந்தபோது announce செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 12 வருடங்கள் ஆகிவிட்டன. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தேன். அவர் உடனே கைத்தறி பட்டுப் பூங்கா குறித்து ஆய்வு செய்தார். அப்பொழுது, எதெல்லாம் pending என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நீங்கள் முதலில் காஞ்சிபுரம் செல்லுங்கள் என்று ஆணையிட்டார். நான் அமைச்சரானதும் முதலில் சென்றது காஞ்சிபுரம்தான். மாண்புமிகு அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்களும், காஞ்சிபுரம் பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களும் சென்று அங்கே ஆய்வு செய்தோம். காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா பட்டுப் பூங்கா அப்படியே pending–ல் இருந்தது. உடனே அந்த முதலீட்டாளரை அழைத்து கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் Collector Office–ல் meeting நடத்தினோம். என்ன செய்வீர்கள் என்று தெரியாது, 2021 ஆம் வருடம் செப்டம்பர் மாதத்திற்குள் இந்த பட்டுப் பூங்கா ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, செப்டம்பர் மாதம் நாங்கள் ஆரம்பித்தோம். அங்கே கிட்டத்தட்ட 24 sheds போடவேண்டும். 12 sheds ready; 6 sheds–க்கான வேலை நடந்துகொண்டிருக்கிறது. இந்த 6 sheds அமைக்கும் பணி இந்த செப்டம்பர் மாதத்திற்குள் நிறைவடையும்.

2022 ஏப்ரல் 7]

இன்றைக்கு நான்கு ஜவுளி பூங்காக்கள்தான் செயல்படாமல் இருக்கின்றன. GILT Integrated Textile Park, Tiruppur. *அதுவும் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. 10* percent–*தான் வேலை நடந்திருக்கிறது. அதேமாதிரி பல்லவாடாவில் ஜவுளிப் பூங்கா இருக்கிறது.* Pallavada Technical Textile Park, Erode; *அதுவும் அப்படியேதான் இருக்கிறது.* SIMA Textile Processing Park, Cuddalore; *அதில் கொஞ்சம் பிரச்சினை. அவற்றை நாங்கள் ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். வேதா ஆயத்த ஆடை கைத்தறிப் பூங்கா, நாகப்பட்டினம்* (Veda Garment Park, Nagapattinam). *அதுவும்* pending–*ல் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், திருச்செங்கோடு தொகுதியில் இப்பொழுது ஜவுளிப் பூங்கா அமைக்க தொழில்முனைவோர் முன்வந்தால், அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி பரிசீலிக்கப்படும். அதுதான் இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள உண்மையான நிலைமை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள். தமிழ்நாடு முழுவதற்கும் பதில் சொல்லிவிட்டார்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைச் செய்வார் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறது. திருச்செங்கோட்டிலே கதர் துணி தயாரிக்கின்ற காந்தி ஆசிரமம் இருக்கின்றது. 1925 ஆம் ஆண்டிலிருந்து அங்கே கதர் துணி தயாரிக்கிறார்கள். மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 9 ஆண்டு காலம் காந்தி ஆசிரமம், திருச்செங்கோட்டில் தங்கியிருந்திருக்கின்றார். மகாத்மா காந்தியடிகள் அங்கே இரண்டு முறை வந்திருக்கின்றார். ஜவஹர்லால் நேரு அவர்கள் அங்கே வந்திருக்கின்றார். இப்படி மிகப் பிரசித்தி பெற்ற இடமாக திருச்செங்கோட்டிலிருக்கும் காந்தி ஆசிரமம் இருக்கின்றது. காந்தி ஆசிரமத்திற்கு 26 ஏக்கர் நிலம் அங்கே இருக்கின்றது. அந்த இடத்தில் கதர் துணிகளை முன்னெடுக்கின்ற வேலைகளைச் செய்ய வேண்டும். தயாரிப்பதில் பிரச்சினை கிடையாது. அதனை சந்தைப்படுத்துவதில் மிகவும் தடுமாறுகிறார்கள். அதைப்போல காந்தி ஆசிரமங்கள் எல்லாம்* G.S.T. *வரி விதிப்பால் இன்றைக்கு மிக கஷ்டமான சூழ்நிலையில் இருக்கின்றன. காந்தி ஆசிரமத்தில் தயாரிக்கின்ற பொருட்களுக்கு இன்றைக்கு* G.S.T.

வரி விதிக்கப்படுகிறது. அதனால் காந்தி ஆசிரமத்திற்கு மிகப் பெரிய அளவில் நிலங்கள் இருந்தாலும்கூட வளர்ச்சி இல்லாமல் இருக்கிறது. அதனால், அங்கே தயாரிக்கப்படுகின்ற கதர் துணிகளை அரசே கொள்முதல் செய்து, ஏதாவது ஒரு வகையில் அதைப் பயன்படுத்தினால், தமிழகத்தில் இருக்கின்ற காந்தி ஆசிரமங்கள் எல்லாம் மறுபடியும் பிரகாசமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கும். அதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி ஆசிரமம் என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் காதி ஆரம்பிக்கும்போது கிட்டத்தட்ட 4,000 பேர் வேலை செய்துகொண்டிருந்தார்கள். கலைஞர் ஆட்சியில் இருக்கும்போது 2,000 பேர் வேலை செய்தார்கள். இந்தப் பத்து வருடங்களில் அது 400 பேர்களாகிவிட்டது. இப்பொழுது நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், காதி பவன் குறித்து இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு ஒவ்வோர் இடமாகச் சென்று பார்த்து நாங்கள் முயற்சி செய்து வருகிறோம். நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.

முற்பகல் 10—25

திருமதி V. அமலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நிறைந்த குடியாத்தம் சட்டமன்றத் தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி ஆடைகள் பல்வேறு நாடுகளுக்கு இடைத்தரகர்கள்மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இதனால் உற்பத்தி செய்யும் கைத்தறி நெசவாளர்களுக்குப் போதிய வருவாய் கிடைப்பதில்லை. எனவே, நெசவாளர்கள், தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களை நேரடியாக விற்பனை செய்யும்பொருட்டு, குடியாத்தம் பகுதியில் நெசவாளர் பூங்கா ஒன்றை ஏற்படுத்தித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு கூலி மிகவும் குறைவாக இருக்கிறது என்று கருதிதான், அங்கு வெறும் லுங்கிதான் தயார் செய்து கொண்டிருந்த நிலையில், நெசவாளர்களுக்கு அதிக வருமானம் வர வேண்டும் என்பதற்காக, அவர்கள்* modern *ஆக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக, அதே குடியாத்தம் பகுதியில் ஒரு திட்டத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி, நாங்கள் சென்று தொடங்கி வைத்தோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று, நெசவாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

68—

சார்–பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***3044—திருமதி ஆ. தமிழரசி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை பதிவு மாவட்டம், மானாமதுரை சார்–பதிவாளர் அலுவலகம் 1894 ஆம் ஆண்டு முதல் அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கட்டடத்தில் கடந்த மாதம் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, மானாமதுரை